**மாவனல்ல பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுலை 16 திகதி மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் மாவனல்ல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி ரூபா 2,018,711 குறைவாக கணக்கீடு செய்யப்படடிருந்தது. | வட்டி வருமானத்தை சரியாக உறுதி செய்து கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் மூலம் அதனை சரி செய்வதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 7 ஏக்கர் காணியொன்றை சுவீகரிக்க நகர அபிவிருத்தி அதிகார சபையில் வைப்புச் செய்திருந்த ரூபா 3,300,000 இனை, காணியை சுவீகரிக்க முன்னர் காணி மற்றும் கட்டிடத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | சுவீகரித்துக் கொண்டு மூலதனமாக்க வேண்டும். | 2020 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் மூலம் இவ் விடயத்தை சரி செய்வதாக அறிவிக்கிறேன். |
| (இ) | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் மீதி மற்றும் அதனுடன் தொடர்புடைய உபயோக பதிவேட்டிற்கிடையில் ரூபா 2,904,603 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் உபயோகப் பதிவேடுகளை இணக்கஞ் செய்ய வேண்டும். | ஊழியர் கடனை 2020 ஆண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் நிலையான வைப்புக்கள் தொடர்காக வங்கியினால் குறித்த கணக்கறிக்கை முன்வைக்கவில்லை என அறிவிக்கிறேன். |
| (ஈ) | பெறுமதி ரூபா 6,055,573 ஆன நூலக புத்தகங்களிற்கான விரிவான அட்டவணை சமர்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும். | 2020 இறுதிக் கணக்குகள் சமர்ப்பிக்கும் போது அட்டவணையுடன் சமர்ப்பிப்பதாக அறிவிக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 இன் 24 ஆம் இலக்கம தேசிய வருமான வரி சட்டம் (86 மற்றும் 87 பிரிவு) | ரூபா 184,000 உழைக்கும் போதான கொடுப்பனவை அறவிட்டு அனுப்பிருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரியான தன்மையை உறுதி செய்து கொண்டு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை 371 (இ) | 2009 ஆண்டு முதல் நிலவிய 04 நிமித்த கட்டுநிதி மற்றும் 2017 ஆண்டு முதல் நிலவிய 01 கட்டுநிதியாக கூட்டுத் தொகை ரூபா 255,161 இனை தீர்த்து இருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | 1985 மே 21 திகதிய 291 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.2(அ) ஆம் பந்தி | விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் பங்களிக்க விருப்பம் தெரிவித்த பெண் அலுவலர் ஒருவர் அதிலிருந்து விலகும் போது 1982 ஜனவரி 01 முதல் 2019 ஆகஸ்ட் வரை பங்களிப்பு பணம் ரூபா 382,884 அறவிட்டு இருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெண் அலுவலரின் ஓய்வூதிய கோவை தற்போது சபரகமுவ உள்ளூராட்சி ஆணையார் அலுவலகத்தில் உள்ளதாக அறிவிக்கிறேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 124,649,146 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 44,599,894 ஆனது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் வரி | 15,732,365 | 13,544,942 | 12,390,577 | 7,873,421 | 15,609,000 | 14,904,164 | 13,115,000 | 8,671,000 |
| (ii) | வாடகை | 34,819,400 | 30,516,529 | 29,993,888 | 5,091,631 | 32,307,000 | 28,094,330 | 25,194,000 | 5,156,000 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,850,280 | 3,299,313 | 1,386,207 | 2,094,808 | 3,400,000 | 3,620,247 | 682,000 | - |
| (iv) | ஏனைய வருமானம | 65,613,000 | 47,037,127 | 81,603,701 | 47,186,789 | 52,465,000 | 46,132,288 | 40,407,975 | 95,700,453 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

#### (அ) வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 7,873,421 ஆன நிலுவை வீதவரி மீதியினுள் 04 வருடங்களை விஞ்சிய காலமாக நிலவிவரும் ரூபா 3,691,227 தொகை உள்ளடங்கியிருந்தது. | பிரதேச சபை சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உயர் மட்டத்தை அடைந்து கொள்ள தற்போது அனைத்து முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருப்பதாக அறிவிக்கிறேன். |

#### (ஆ) ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 175,261 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதியினுள் 04 வருடங்களை விஞ்சிய காலமாக நிலவிவரும் ரூபா 64,944 தொகை உள்ளடங்கியிருந்தது. | நிலுவை ஏக்கர் வரி பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏக்கர் வரி அறவிட அனைத்து முயற்சிகளையும் எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை கடை வாடகை ரூபா 3,541,395 ஆனதுடன் அவற்றில் ரூபா 2,837,322 தொகை 04 வருடங்களை விஞ்சிய காலமாக நிலுவையாக இருந்தது. | நிலுவை வாடகை பணத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வெண்டும். | நிலுவையை அறவிட அனைத்து முயற்சிகளையும் எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 2.2.4 அனுமதிப்பத்திர கட்டணம்

**சுற்றாடல் அனுமதிப்பத்திரம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்திய 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்கள் பிரகாரம அனுமதிப்பத்திர காலம் முடிவடைந்திருந்த 40 கைத்தொழில்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருந்தாததுடன் அனுமதிப்பரம் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்திருந்த 07 வியாபார நிறுவனங்களிற்கு மீளாய்வாண்டு இறுதிவரையும் அனுமதிப்பத்திரம் வழங்கியிருக்கவில்லை. அதன் காரணமாக சபைக்கு ரூபா 188,000 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன், அவ் வியாபாரங்களினால் சூழலிற்கு ஏற்பாடும் தாக்கங்கள் தொடர்பாக காலரீதியான மதிப்பீடொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிட வேண்டியிருந்த ரூபா 324,000 தொகையிலிருந்து ரூபா 136,000 அறவிடப்பட்டுள்ளதுடன் மேலும் ரூபா 188,000 அறவிட வேண்டி உள்ளதாக அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) செயலாற்றுகை அறிக்கை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | செயலாற்றுகை அறிக்கை பிரகாரம் நிறுவனப் பிரிவில் 03 சுட்டிகள், நிதிப் பிரிவில் 06 சுட்டிகள், வருமானப் பிரிவில் 11 சுட்டிகள், அபிவிருத்தி பிரிவில் 08 சுட்டிகள் மற்றும் நூலகப் பிரிவில் 10 சுட்டிகளும் எதிர்பார்த்த செயலாற்றுகை விளைவுகளை அடைந்துள்ளமை 50 சதவீதத்திற்கும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | எதிர்பார்த்த செயலாற்றுகை விளைவுகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டில் செயல் நடவடிக்கை திட்டத்திற்கு இணங்கக் கூடிய வகையில் செயலாற்றலை செயற்படுத்திச் செல்ல முயற்சிப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) | செயலாற்றுகை அறிக்கையின் இணக்கப்பாட்டு அறிக்கை பிரகாரம் ஆதனங்களை மதிப்பீடு செய்தல், ஆதனங்களை வருடாந்தம் வாடகைக்கு வழங்கல், சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை, இழப்பீடு மற்றும் நட்டப் பதிவேடு தயாரிக்கப்படாமை, முறையற்ற கழிவு வெளியேற்றம், ஆளணி ஒழுங்கமைப்பு, சாலை தொழிநுட்ப தொகுதியொன்றை நிறுவுதல், இணைய வசதிகளை மக்களுக்கு வழங்குதல போன்ற விடயங்களை மேற்கொண்டிருக்கவில்லை. | செயலாற்றுகை அறிக்கையின் இணங்காமைகளை நிரைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டில் இவ்விடயங்களை ஒழுங்கு முறையாக கையான்டு செல்ல நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். |

**(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தினந்தோறும் 30 டொன் அளவு கழிவுகள் கலப்பாக சேர்க்கப்படுவதுடன் ஊழியர் பற்றாக்குறையின் காரணமாக கழிவுகளை பிரிக்க முடியாதிருந்தது. | ஊழியர் பற்றாக்குறைக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும். | கழிவுப் பொருட்களை ஒன்று சேர்க்கும் போது உக்கலடையும் மற்றும் உக்கலடையாத கழிவுகள் என பிரித்து திரட்டுதல் தற்போது மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கிறேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 67,672,322 ஆன செலுத்த வேண்டிய கணக்கு மீதியிலிருந்து ரூபா 3,107,312 ஆன தொகை 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த போதும் அம் மீதிகளை இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | செலுத்த வேண்டிய மீதிகளில் பெறும்பாலானவை மீண்டும் கோரும் போது செலுத்த வேண்டிய பணமாகும் என அறிவிக்கிறேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 15 பதவி வகைகளில் 31 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், ஓர் மிகையும் காணப்பட்டது. தீயணைப்பு அலகிற்குரிய 05 பதவிகளின் 20 அங்கீகார ஊழியர் எண்ணிக்கை காணப்பட்டது. அவற்றுள் அங்கீகார தீயணைப்பு படையினர் 12 ஆகக் காணப்பட்ட போதும், அமைய அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 07 நபர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவ்வாறே சபையின் கள நிர்வாக பதவியும் 2017 ஏப்ரல் 03 முதல் வெற்றிடமாக காணப்பட்டது. | முக்கிய வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | 31 வெற்றிடங்களில் 23 இற்கு சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் ஆட்சேர்க்கப்படுவதுடன், எஞ்சிய 08 பதவிகளை சபரகமுவ மாகாண பிரதான அமைச்சினால் நிரந்தர ஆட்சேர்ப்பு மேற்கொள்ள வேண்டுமென அறிவிக்கிறேன். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2015 ஆண்டு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து கிடைத்திருந்த கெப் வண்டியொன்றை மீளாய்வாண்டு இறுதிவரையும் சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கெப் வண்டியை சபைக்கு சுவீகரித்துக் கொள்ள தேவையான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கிறேன். |

#### 3.4.2 குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கருத்திட்டமொன்றின் கீழ் பிரதான அமைச்சினால் 2017 ஆண்டில் வழங்கியிருந்த ரூபா 804,232 பெறுமதியான கெப் வண்டி விளைவற்று காணப்பட்டது. | பயன்படுதடுத்த முடியுமான முறையொன்றை இனங்காண வேண்டும். | போதிய ஊழியர் எண்ணிக்கை இல்லாமை பொலிதீன்களை சுத்தமாக வேறாக்கி பெற்றுக் கொள்வதில் உள்ள கடினம் காரணமாக பேல் இயந்திரத்தை இயக்குவதில்லை என அறிவிக்கிறேன். |

| | | |
|---|---|---|
| (ஆ) வர்க்க அடி 7,930 அளவு விசாலமான நாடக அரங்கின் அடிப்படை தேவைகளான திரை புடவை, யன்னல் புடவை, மின் ஒளித் தொகுதி, மின் பிரப்பாக்கி மற்றும் வாகன தரிப்பிட வசதி வழங்கப்படாததால், அவற்றிலிருந்து எதிர்பார்த்த பயன்பாடு ஏற்பட்டிருக்கவில்லை. நாடக அரங்கின் வாடகை மற்றும் வைப்புத் தொகை முறையே ரூபா 10,000 மற்றும் ரூபா 5,000 இனால் குறைக்க 2014 திசெம்பர் 30 திகதி மகா சபை தீர்மானித்திருந்த போதும் நாடக அரங்கை அபிவிருத்தி செய்து வருமானம் ஈட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வசதிகளை வழங்கி வருமானம் ஈட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | போதிய வசதிகள் இல்லாததால் மகா சபையின் தீர்மானத்தின் கீழ் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்பட்டதாகவும் வசதிகளை வழங்க சபையின் அனுமதியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் மூலதன செலவு விடயங்களில் ரூபா 25,634,280 ஆன மொத்த ஒதுக்கீடும் எஞ்சியருந்ததுடன் ஏனைய மீண்டுவரும் மற்றும் மூலதன செலவு விடயங்களில் ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமான சேமிப்பு ரூபா 18,080,708 ஆனது. | திட்டமிட்ட வகையில் ஒதுக்கீட்டை ஏற்பாடு செய்யவும், அவ் ஒதுக்கீடுகளை வினைத்திறமாக பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த விடயங்களை நிரைவேற்ற இயலாத போனதால் அச் செலவின தலைப்புகளில் பணம் நூரு வீதம் மீதியாக காணப்பட்டதாகவும் மற்றும் செலவு ஏற்படுமெனக் கருதி ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்ட போதும் அவை அவ்வாறு செலவு ஏற்படாததால் பணம் எஞ்சியுள்ளதாக காணப்படுவதாக அறிவிக்கிறேன். |

### 4.2 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஹிங்குல வியாபார கட்டிடத் தொகுதியில் 2001 ஆண்டு முதல் கடையறை ஒன்றிற்காக பெறவேண்டிய ஒரே தடவையில் செலுத்தும் பணம் (Key money) ரூபா 50,350 தொகை மற்றும் ஹெம்மாத்தகம வியாபார கட்டிடத் தொகுதியில் 07 கடையறைகளிற்காக 2001 ஆண்டு முதல் பெற வேண்டிய ஒரே தடவையில் செலுத்தும் பணம் ரூபா 1,607,775 தொகை 2019 திசெம்பர் 31 திகதி வரை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒரே தடவையில் செலுத்தும் பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஹிங்குல வியாபார கட்டிடத் தொகுதியில் பொது வசதிகள் போதாமையினால் குத்தகைக்காரர் ஒரே தடவையில் செலுத்தும் பணத்தில் ஒரு பகுதியை செலுத்தியுள்ளதாகவும் நிரமானங்களை மேற்கொண்ட பின்னர ஒரே தடவையில் செலுத்தும் பணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |